# NATIONAL FISHER WOMEN'S CONCLAVE

# மீனவ பெண்கள் - தேசிய கலந்தாய்வு

## கருத்து சாதனம்

ஜூலை 2026



மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு

# NATIONAL FISHER WOMEN’S CONCLAVE

# மீனவ பெண்கள் – தேசிய கலந்தாய்வு

## கருத்து சாதனம்

**ஜூலை 2026**

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு

# NATIONAL FISHER WOMEN'S CONCLAVE
# மீனவ பெண்கள் – தேசிய கலந்தாய்வு

ஜூலை 2026

Creative Commons License 4.0 (BY NC SA)

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு**
மொ: +91 86680 91451 | ஈ: swan@hrf.net.in | இ: www.hrf.net.in

# தமிழ்நாடு மீனவர் கொள்கை

## 1. அறிமுகம்

தமிழ்நாடு இந்தியாவில் 1,076 கி.மீ. நீளமான கடற்கரையைக் கொண்ட முக்கியமான கடலோர மாநிலமாகும். 14 கடலோர மாவட்டங்களில் வாழும் இலட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் மீன்வளத்தைச் சார்ந்துள்ளது. மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு, மாநிலத்தின் கணிசமான கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதோடு, பொதுமக்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவை வழங்குவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. மாநிலத்தில் சுமார் 10.48 இலட்சம் கடல் மீனவர்களும், 2.36 இலட்சம் உள்நாட்டு மீனவர்களும் வாழ்வாதாரத்திற்காக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டின் மீன்வளத் துறை சராசரியாக 7.02 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது. 2023–24ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த வேளாண் உள்நாட்டு உற்பத்தியில் மீன்வளத்தின் பங்கு 7.49 சதவீதமாக இருந்தது. 2023–24ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த மீன் உற்பத்தி 8.84 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இதில், 6.37 இலட்சம் மெட்ரிக் டன் கடல் மீன் உற்பத்தியாகும். அதே ஆண்டில் 1.34 இலட்சம் டன் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் ₹6,854.22 கோடி அன்னியச் செலாவணி ஈட்டப்பட்டுள்ளது.

## 2. மீன்வளக் கொள்கை

தமிழ்நாடு அரசின் மீன்வளக் கொள்கையின் நோக்கம், தரமான மீன் மற்றும் மீன் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் சமூக பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துதல், சமூகப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் மீனவர்கள், மீன்வளர்ப்போரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகும்.

### *2.1 தொலைநோக்குப் பார்வை*

வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், ஊட்டச்சத்து மிக்க உணவை வழங்குதல், மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்து, மேம்படுத்தி, நிலையான முறையில் மேலாண்மை செய்து பயன்படுத்துவதன் மூலம் மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பொருளாதார நிலையையும் மேம்படுத்துதல்.

### *2.2 நோக்கம்*

மாநிலத்தில் மீன்வளர்ப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்களை மேம்படுத்துதல், மீன் உற்பத்தியின் அளவையும் தரத்தையும் உயர்த்துதல்,

மீன்வளர்ப்போரின் வருவாயை அதிகரித்தல், மீனவர்களின் வளர்ச்சி, பாதுகாப்பு, சமூக பொருளாதார முன்னேற்றம் மற்றும் வாழ்க்கைத் தர மேம்பாட்டை உறுதி செய்தல்.

### *2.3 முக்கியக் கொள்கைகள்*

மீன்வளத் துறையின் முக்கியக் கொள்கைகள் பின்வருமாறு:

1. தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுதல்.
2. நன்னீர், உவர்நீர் மற்றும் கடல்வள ஆதாரங்கள் மூலம் மீன் உற்பத்தியை அதிகரித்தல்.
3. பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.
4. மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல்.
5. மீன்வளர்ப்பின் மூலம் ஊரகப் பகுதிகளில் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.
6. மீனவ மகளிருக்கு புதிய வாழ்வாதாரத் திட்டங்களை உருவாக்கி, அவர்களின் பொருளாதார அதிகாரமளிப்பை உறுதி செய்தல்.
7. அரசு மீன்பண்ணைகள், மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், குளிர்பதன சேமிப்பு மற்றும் போக்குவரத்து அமைப்பு, மதிப்புக் கூட்டுதல் மற்றும் மீன்பிடிக்கு முன் மற்றும் பின் தேவையான வணிக நடவடிக்கைகளுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி மேம்படுத்துதல்.
8. உரிய சட்டங்கள் மற்றும் விதிகளை அமல்படுத்துவதன் மூலம் மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்து, வளப்படுத்தி, நிலையான முறையில் மேலாண்மை செய்தல்.
9. வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு, உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஏதுவாக உள்நாட்டு மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்து, நிலையான முறையில் பயன்படுத்துதல்.
10. தமிழ்நாட்டின் மீன்வள ஆதாரங்கள் மற்றும் அவற்றின் உற்பத்தித் திறனை காலமுறைப்படி மறுமதிப்பீடு செய்தல்.
11. மீன்குஞ்சு உற்பத்தியை அதிகரித்தல்.
12. உயர்மதிப்புடைய மீன்கள் மற்றும் மீன் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியை விரிவுபடுத்துதல்.
13. மீனவர்கள் மற்றும் மீன்வளத் துறை அலுவலர்களுக்கு திறன் மேம்பாடு, மனிதவள மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குதல்.

14. மின் ஆளுமை (e-Governance) வாயிலாக திட்டங்கள் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுத்தப்படுவதை கண்காணித்து உறுதி செய்தல்.

### *2.4 துறையின் முக்கிய செயல்பாடுகள்*

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:

- தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுதல்.
- இயற்கைப் பேரிடர் காலங்களில் தேடுதல், மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- கடல் மீன்பிடியின்போது மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- மீன்வளச் சட்டங்கள் மற்றும் விதிகளை திறம்பட அமல்படுத்துதல்.
- மீனவர்களுக்கான பல்வேறு சமூக நலத் திட்டங்களை செயல்படுத்துதல்.
- மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், அரசு மீன்பண்ணைகள் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி மேம்படுத்துதல்.
- சுகாதாரமான முறையில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்குத் தேவையான குளிர்காப்பு மற்றும் சேமிப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
- நீர்நிலைகளில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்வதன் மூலம் கடல் மற்றும் உள்நாட்டு மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்து, வளப்படுத்தி, நிலையான முறையில் மேலாண்மை செய்தல்.
- ஒன்றிய மற்றும் மாநில அரசுத் திட்டங்களின் மூலம் உள்நாட்டு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பை மேம்படுத்துதல்.
- மீன் உற்பத்தியை அதிகரிக்க நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்துதல்.
- மீனவ மகளிருக்கான சிறப்பு மாற்று வாழ்வாதாரத் திட்டங்களை செயல்படுத்துதல்.
- மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குதல்.
- விரிவாக்கப் பணிகள் மூலம் அரசுத் திட்டங்களின் பயன்களை மீனவர்களிடம் கொண்டு சேர்த்தல்.
- மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தை மேற்பார்வையிட்டு வலுப்படுத்துதல்.

- மாற்று வாழ்வாதார நடவடிக்கைகள் மூலம் மீனவர்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.
- மீனவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்ட டீசல் மற்றும் மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துதல்.
- தமிழ்நாடு மீனவர் நல வாரியம் மூலம் நிவாரணங்கள் மற்றும் நல உதவிகளை வழங்குதல்.
- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் வாயிலாக வணிக ரீதியிலான மீன்வள மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்.
- தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் மற்றும் அதனுடன் இணைந்த கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்.

## 3. நிர்வாக அமைப்பு

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் தலைவராக ஆணையர் செயல்படுகிறார். மேலும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர்,

- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராக,
- தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் உட்பட அனைத்து மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பதிவாளராக, மற்றும்
- தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் உறுப்பினர்-செயலராக
- பொறுப்பேற்று, துறையின் நிர்வாகம், திட்ட அமலாக்கம் மற்றும் நலத்திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகிறார்.

## திட்டங்கள்

1. மீன்பிடிப்பு குறைவு காலத்தில் நிவாரணம்: வடகிழக்கு பருவமழைக் காலத்தில் மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, மீனவர்களுக்கு வானிலை எச்சரிக்கைகள், தொடர்ந்து வழங்கப்படுகின்றன. இதன் காரணமாக, மீன்பிடி நாட்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைகிறது. இந்தக் கடினமான காலகட்டத்தில் கடல் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவித் தொகை ₹6000 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

2. மீன்பிடி தடைக்கால நிவாரணம்: மீன் இனப்பெருக்கத்தை பாதுகாக்க ஒவ்வொரு ஆண்டும் 61 நாட்கள் பருவகால மீன்பிடித் தடை அமல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்தடைக்காலம் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் (திருவள்ளூர் மாவட்டம் முதல் கன்னியாகுமரி மாவட்டம் வரை) ஏப்ரல் 15 முதல் ஜுன் 14 வரை அமல்படுத்தப்படுகிறது. மேலும், மேற்குக் கடற்கரைப் பகுதியில் (கன்னியாகுமரி மாவட்டம், கோவளம் முதல் நீரோடி வரை) ஜுன் 1 முதல் ஜுலை 31 வரை மீன்பிடித் தடை கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த காலத்தில் மீனவக் குடும்பங்களுக்கு ₹8,000 வரை நிவாரண உதவி வழங்கப்படுகிறது.

**2. மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்**

மத்திய அரசு, மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை நிறுத்தியதையடுத்து, 2022–23 ஆம் ஆண்டு முதல் கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் மாநிலத் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், மீன்பிடி குறைவுக் காலங்களில் கடல் மீனவர்களுக்கு, அவர்களின் ₹1,500/- பங்களிப்புடன் சேர்த்து மொத்தம் ₹4,500/- நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.

**3. மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்**

கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் 2006 2007 ஆம் ஆண்டில் மாநிலத் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், மீன்பிடி குறைவுக் காலங்களில் ஒவ்வொரு மீனவ மகளிருக்கும் அவர்களின் ரூ.1,500/- பங்களிப்புடன் சேர்த்து மொத்தம் ரூ.4,500/- நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.

**4. டீசல் மற்றும் மண்ணெண்ணெய் மானியம்**

- பதிவு செய்யப்பட்ட மீன்பிடிப் படகுகளுக்கு வரிவிலக்கு டீசல்.
- பாரம்பரிய படகுகளுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய்.

மீன்பிடி விசைப்படகுகளுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படும் டீசலின் அளவு ஆண்டொன்றிற்கு 18,000 லிட்டரிலிருந்து 19,000 லிட்டராகவும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு 4,000 லிட்டரிலிருந்து 4,400 லிட்டராகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**5. மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களின் குடும்பங்களுக்கு உயர்த்தப்பட்ட விகிதத்தில் தின உதவித் தொகை வழங்குதல்**

கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களின் குடும்பங்களுக்கு, இரண்டு ஆண்டுகள் வரை அல்லது குழு விபத்துக் காப்புறுதித் திட்டம் / தமிழ்நாடு மீனவர் நல வாரியம் ஆகியவற்றின் கீழ் நிவாரண உதவி கிடைக்கும் வரை வழங்கப்படும் தின உதவித் தொகை, நாள் ஒன்றுக்கு ₹250/- இலிருந்து ₹350/- ஆக (மாதம் ஒன்றுக்கு ₹7,500/- இலிருந்து ₹10,500/- ஆக) உயர்த்தி வழங்கப்படுகிறது.

**6. மீன்பிடிக்கும்போது பிற நாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களின் குடும்பங்களுக்கு உயர்த்தப்பட்ட விகிதத்தில் தின உதவித் தொகை வழங்குதல்**

கடலில் மீன்பிடிக்கும்போது இலங்கை மற்றும் பிற நாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களின் குடும்பங்களுக்கு மாநில அரசு வழங்கும் தின உதவித் தொகை நாள் ஒன்றுக்கு ரூ.250/- இலிருந்து ரூ.350/- ஆகவும் (மாதம் ஒன்றுக்கு ரூ.7,500/- இலிருந்து ரூ.10,500/- ஆகவும்) உயர்த்தப்பட்டுள்ளது.

**இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழக்கும் / காயமடையும் மீனவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்குதல்**

கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவர்கள், தங்களது பாரம்பரிய மீன்பிடிப் பகுதியான பாக் வளைகுடா பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது, இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுதல் / துன்புறுத்தப்படுதல் போன்றவற்றுடன், சில சமயங்களில் துப்பாக்கிச் சூட்டிற்கும் இலக்காகும் மீனவர்களின் குடும்பத்தினருக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ₹3.00 இலட்சம் வழங்கும் திட்டம் 1997ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், உயிரிழந்த மீனவர் அக்குடும்பத்தின் ஒரே பொருளீட்டுபவராக இருப்பின், ₹5.00 இலட்சம் கருணைத் தொகையாக வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று, மீனவர் பலத்த காயம் மற்றும் சிறு காயம் அடையும் போது, முறையே ₹50,000/- மற்றும் ₹20,000/- கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது.

**மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம்**

மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம், மாநில அரசு மற்றும் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இறக்கும் / நிரந்தர ஊனமடையும் மீனவருக்கு ₹5.00 இலட்சமும், பகுதி ஊனமடையும் மீனவருக்கு ₹2.50 இலட்சமும், காயமடையும் மீனவருக்கு மருத்துவச் செலவினமாக ₹25,000/-மும் நிவாரணமாக வழங்கப்படுகிறது.

# மீனவ மகளிரின் கூட்டமைப்பை கட்டமைத்தல்

**முன்னுரை**

தமிழகத்தின் 14 கடலோர மாவட்டங்களில் வாழும் மீனவ சமூகங்களின் பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் சமூக வாழ்க்கையின் மையமாக மீனவப் பெண்கள் திகழ்கின்றனர். கடலுக்குச் சென்று மீன் பிடிப்பவர்கள் பெரும்பாலும் ஆண்களாக இருந்தாலும், மீன்பிடித் தொழிலின் முழுமையான மதிப்புச் சங்கிலியை தாங்கி நிற்பவர்கள் மீனவப் பெண்களே. மீன் பிடிப்பிற்கு முன் தயாரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல், மீன் இறக்குதல், தரம் பிரித்தல், சுத்தம் செய்தல், உலர்மீன் தயாரித்தல், மதிப்புக் கூட்டப்பட்ட மீன் பொருட்கள் தயாரித்தல், சந்தைப்படுத்தல், சில்லறை விற்பனை, குடும்ப நிதி மேலாண்மை, கடன் திருப்பிச் செலுத்துதல் மற்றும் குழந்தைகளின் கல்வி, குடும்ப நலன் போன்ற பல்வேறு பொறுப்புகளை அவர்கள் தினந்தோறும் மேற்கொள்கின்றனர்.

மீனவ பெண்களின்  உழைப்பு மீன்வள பொருளாதாரத்தின் அடித்தளமாக இருந்தாலும், அவர்களின் பங்களிப்பு பல நேரங்களில் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்படுவதில்லை. மீனவர் என்ற அடையாளம், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், காப்பீடு, ஒய்வூதியம், கடன் வசதிகள், தொழில் மேம்பாட்டு திட்டங்கள் மற்றும் கொள்கை முடிவெடுக்கும் அமைப்புகளில் பெண்களுக்கு போதுமான பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை. குறிப்பாக மீன் விற்பனை செய்யும் பெண்கள், உலர் மீன் தொழிலாளர்கள், நண்டு மற்றும் இறால் பதப்படுத்தும் பெண்கள், உப்பளத்தில் பணிபுரியும் பெண்கள்,  தனித்து வாழும் பெண்கள், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி மீனவ பெண்கள் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் பாலின அடிப்படையிலான சவால்களை எதிர்கொள்கின்றனர்.

இன்றைய சூழலில் காலநிலை மாற்றம், கடலரிப்பு, கடல் மாசுபாடு, புயல்கள், கடல் வளங்களின் குறைவு, எரிபொருள் விலை உயர்வு, இடைத்தரகர்களின் ஆதிக்கம், சந்தை நிலையற்ற தன்மை மற்றும் இயற்கைப் பேரிடர்கள் ஆகியவை மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை கடுமையாக பாதித்து வருகின்றன. இத்தகைய சவால்கள் பெண்களின் வேலைவாய்ப்பு, வருமானம், குடும்பப் பாதுகாப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றிலும் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

இந்த சவால்களை தனிநபர்களாக எதிர்கொள்வது சாத்தியமல்ல. கிராமம், ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவுகளில் ஒற்றுமையுடனும் ஜனநாயக முறையிலும் செயல்படும் வலுவான பெண்கள் அமைப்புகள் உருவாக வேண்டியது காலத்தின்

தேவையாகும். பெண்கள் ஒன்றிணைந்து செயல்படும்போது மட்டுமே தங்களது உரிமைகளை வலியுறுத்தவும், அரசுத் திட்டங்களை முழுமையாகப் பெறவும், கொள்கை முடிவுகளில் தங்களது குரலைப் பதிவு செய்யவும், மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கவும், சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்யவும் முடியும்.

இந்த நோக்கத்துடன் அனைத்து கடலோர மாவட்டங்களிலும் மீனவப் பெண்கள் கூட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இந்த கூட்டமைப்பு வெறும் நலத் திட்டங்களைப் பெரும் அமைப்பாக மட்டுமல்லாமல், மீனவப் பெண்களின் தலைமைத்துவத்தை வளர்க்கும், உரிமைகளைப் பாதுகாக்கும், சமூக நீதி மற்றும் பாலின சமத்துவத்தை முன்னெடுக்கும், நிலையான மீன்வள மேலாண்மையை ஊக்குவிக்கும் மற்றும் கடலோர சமூகங்களின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்காக செயல்படும் அமைப்பாக செயல்படும்.

**இந்த கூட்டமைப்பு பின்வரும் நோக்கங்களுடன் செயல்படும்**

- மீனவ மகளிரின் ஒற்றுமையையும் தலைமைத்துவத்தையும் வலுப்படுத்துதல்.
- பெண்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பங்கேற்பை அதிகரித்தல்.
- அனைத்து பெண்களுக்கும் அரசு நலத்திட்டங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்தல்.
- மீன்வள மதிப்புச் சங்கிலியில் பெண்களின் பங்களிப்பிற்கு உரிய அங்கீகாரத்தைப் பெறுதல்.
- பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் தொழில்முனைவு, மதிப்புக் கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை உருவாக்குதல்.
- காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர்களை எதிர்கொள்ளும் சமூகத் தயார்நிலையை வலுப்படுத்துதல்.
- கடலோர சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான மீன்வள மேலாண்மையில் பெண்களின் பங்களிப்பை உறுதி செய்தல்.
- மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான கொள்கை முடிவுகளில் மீனவப் பெண்களின் குரலை வலுப்படுத்துதல்.

**மாவட்ட மீனவப் பெண்கள் கூட்டமைப்பு** (DFWF)

மாவட்டத்தின் அனைத்து மீனவ பெண்கள் மற்றும் மீன் சார் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து பெண்களும் இந்த கூட்டமைப்பில் உறுப்பினராகலாம். இந்த கூட்டமைப்பின் யுக்திகள் மற்றும் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க ஒவ்வொரு

மாவட்டத்திலும் கீழ்கண்ட நிலைகளில் உள்ள உறுப்பினர்கள் அடங்கிய ஒரு மைய குழு உருவாக்கப்பட வேண்டும். இக்குழு ஒரு பிரதிநிதித்துவக் குழு மட்டுமல்லாமல், மாவட்ட அளவில் மீனவ மகளிரின் உரிமைகள், வாழ்வாதாரம் மற்றும் கொள்கை ஆதரவை முன்னெடுக்கும் ஒருங்கிணைப்பு மற்றும் வலியுறுத்தல் தளமாக செயல்பட வேண்டும்.

**மையக் குழு உறுப்பினர்கள் - மாதிரி வடிவம்**

- தனித்து வாழும் பெண் - தலைவர்
- கடலோர மீனவப் பெண்கள்
- இளம் மீனவ பெண்கள்
- மாற்றுத்திறனாளி மீனவ பெண்கள்
- பெண்கள் சுயஉதவிக் குழு பிரதிநிதிகள்
- மாவட்ட மீன்வள துறை பெண் பிரதிநிதி
- மாவட்ட கிராம/ முன்னணி வங்கி மேம்பாட்டு மேலாளர்
- மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்க பெண் தலைவர் /பிரதிநிதி
- ஊராட்சி பெண் தலைவர் , வார்டு உறுப்பினர்கள்
- சமூக நலத்துறை அலுவலர்
- மீன்வளப் பல்கலைக்கழகம்/ஆராய்ச்சி மையம்/கல்லூரி பெண் பிரதிநிதி
- பேரிடர் மேலாண்மை துறை பெண் பிரதிநிதி
- தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் பெண் பிரதிநிதி
- தமிழ்நாடு மகளிர் மேம்பாடு - திட்ட அலுவலர்
- வழக்கறிஞர் (மாவட்ட சட்ட சேவை மையம்)
- காவல் துறை - பெண் அதிகாரி
- கல்வியாளர்கள்
- பத்திரிக்கையாளர்கள்
- மக்கள் இயக்கங்கள்
- தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள்

### 1. தனித்து வாழும் பெண் (தலைவர்)

கூட்டமைப்பிற்கு தலைமை தாங்குதல். காலாண்டு (3 மாதத்திற்கு ஒருமுறை) கூட்டங்களை நடத்துதல், உறுப்பினர்களின் கருத்துகளை ஒருங்கிணைத்தல், முன்னுரிமைப் பிரச்சினைகளைத் தீர்மானித்தல், சம்பந்தப்பட்ட துறைகளுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

- மாவட்ட பொறுப்பாளர் அலுவலகம் (கூட்டமைப்பின் செயலகமாக செயல்படும் தன்னார்வத்தொண்டு நிறுவனம்)
- பயிற்சி, ஆய்வு, திட்ட ஒருங்கிணைப்பு, வளங்கள் திரட்டுதல் மற்றும் இதர பங்குதாரர்களை ஒருங்கிணைத்து பெண்களின் உரிமை மற்றும் வாழ்வாதார மேம்பாட்டை ஆதரித்தல்.
- **கடலோர மீனவப் பெண்கள்**: கடலோர கிராமங்களில் உள்ள பெண்களின் வாழ்வாதாரம், மீன் விற்பனை, பாதுகாப்பு, குடிநீர், அடிப்படை வசதிகள் தொடர்பான பிரச்சினைகளை கூட்டமைப்பில் முன்வைத்தல், தீர்வுகளை கண்காணித்தல்.
- இளம் மீனவ பெண்கள் பிரதிநிதி: இளம் பெண்களின் திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு, தொழில்முனைவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தலைமைத்துவம் தொடர்பான பயிற்சி மற்றும் தேவைகளை முன்வைத்தல், புதிய தலைமுறையின் பங்கேற்பை உறுதி செய்தல்.
- மாற்றுத்திறனாளி மீனவ பெண்கள் பிரதிநிதி: மாற்றுத்திறனாளி பெண்களின் உரிமைகள், அணுகல் வசதிகள், சமூகப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களை கூட்டமைப்பின் முன்னுரிமைகளில் இணைத்தல்.
- பெண்கள் சுயஉதவிக் குழு பிரதிநிதிகள்: SHG-களின் மூலம் பெண்களின் சேமிப்பு, கடன், தொழில்முனைவு மற்றும் பொருளாதார மேம்பாட்டை ஒருங்கிணைத்தல், அரசு மற்றும் வங்கி இணைப்புகளை ஏற்படுத்துதல்.
- மாவட்ட மீன்வள துறை பெண் பிரதிநிதி: மீன்வளத் துறையின் நலத்திட்டங்கள், உரிமைகள், பயிற்சிகள் மற்றும் திட்டங்களை பெண்களுக்கு கொண்டு சேர்த்தல். கூட்டமைப்பின் கோரிக்கைகளைத் துறைக்கு எடுத்துச் செல்லுதல். முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.
- மாவட்ட கிராம / முன்னணி வங்கி மேம்பாட்டு மேலாளர்: பெண்களுக்கு வங்கி சேவைகள், கடன், நிதி உட்சேர்க்கை, தொழில்முனைவு நிதி மற்றும் அரசுத் திட்டக் கடன்களை எளிதாகப் பெற வழிவகை செய்தல்.
- மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்க பெண் தலைவர் / பிரதிநிதி: கூட்டுறவு அமைப்புகளில் பெண்களின் பங்கேற்பை அதிகரித்தல். சந்தைப்படுத்தல், மதிப்புக் கூட்டுதல் மற்றும் கூட்டுறவு சேவைகளில் பெண்களுக்கு சம வாய்ப்பை உறுதி செய்தல்.

- ஊராட்சி பெண் தலைவர் , வார்டு உறுப்பினர்கள்: உள்ளாட்சி அமைப்புகள் மூலம் குடிநீர், சாலை, மீன் சந்தை, சுகாதாரம், சுகாதார வசதிகள் போன்ற அடிப்படை தேவைகளைத் திட்டமிட்டு நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- சமூக நலத்துறை அலுவலர்: விதவைகள், தனித்து வாழும் பெண்கள், முதியோர், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பெண்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் முழுமையாக கிடைப்பதை உறுதி செய்தல்.
- மீன்வளப் பல்கலைக்கழகம்/ஆராய்ச்சி மையம்/கல்லூரி பெண் பிரதிநிதி: ஆய்வுகள், திறன் மேம்பாட்டு பயிற்சிகள், புதிய தொழில்நுட்பங்கள், மதிப்புக் கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.
- பேரிடர் மேலாண்மை துறை பெண் பிரதிநிதி: பேரிடர் முன்தயார்நிலை, காலநிலை மாற்றத் தகவல்கள், பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் பேரிடர் கால மறுவாழ்வு நடவடிக்கைகளில் பெண்களின் பங்கேற்பை வலுப்படுத்துதல்.
- தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் பெண் பிரதிநிதி: கடலோர மாசுபாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தொழில் சார்ந்த சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல். உரிய நடவடிக்கைகளுக்கு ஒருங்கிணைப்பு செய்தல்.
- தமிழ்நாடு மகளிர் மேம்பாடு - திட்ட அலுவலர்: சுயஉதவிக் குழுக்கள், வாழ்வாதார மேம்பாடு, பெண்கள் தலைமைத்துவம் மற்றும் அரசுத் திட்டங்களுடன் கூட்டமைப்பை இணைத்துச் செயல்படுத்துதல்.
- வழக்கறிஞர் (மாவட்ட சட்ட சேவை மையம்): பெண்களின் சட்ட உரிமைகள், குடும்ப வன்முறை, சொத்துரிமை, தொழிலாளர் உரிமைகள், பாலின வன்முறை மற்றும் இலவச சட்ட உதவி தொடர்பாக வழிகாட்டுதல் வழங்குதல்.
- காவல் துறை - பெண் அதிகாரி: பெண்களின் பாதுகாப்பு, பாலின அடிப்படையிலான வன்முறை தடுப்பு, புகார் பதிவு மற்றும் சட்ட அமலாக்க அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பை உறுதி செய்தல்.
- கல்வியாளர்கள்: கல்வி, திறன் மேம்பாடு, ஆய்வு, ஆவணப்படுத்தல் மற்றும் இளம் தலைமுறையின் சமூகப் பங்கேற்பை ஊக்குவித்தல்.

- **பத்திரிக்கையாளர்கள்:** மீனவ மகளிரின் பிரச்சினைகள், சாதனைகள் மற்றும் கொள்கை கோரிக்கைகளை ஊடகங்களில் வெளிப்படுத்தி பொதுமக்கள் மற்றும் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லுதல்.
- மக்கள் இயக்கங்கள்: பெண்களின் உரிமைகள், சமூக நீதி மற்றும் கொள்கை மாற்றங்களுக்கான ஆதரவு இயக்கங்களை ஒருங்கிணைத்தல். தேவையானபோது கூட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

**காலாண்டு கூட்டங்களின் நோக்கம் மற்றும் நடைமுறை**

ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒருமுறை மாவட்ட மீனவ மகளிர் கூட்டமைப்பு கூட்டம் நடத்தப்பட வேண்டும். அந்தக் கூட்டத்தில்:

- கூட்டமைப்பின் அனைத்து மையக்குழு உறுப்பினர்களும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும்.
- மாவட்டம் முழுவதும் உள்ள மீனவ மகளிரின் முக்கிய மற்றும் அவசரப் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்ய வேண்டும்.
- பெண்களின் உரிமைகள், சமூகப் பாதுகாப்பு, வாழ்வாதாரம், சந்தைப்படுத்தல், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் தொடர்பான முன்னுரிமை இடைவெளிகளை அடையாளம் காண வேண்டும்.
- கண்டறியப்பட்ட இடைவெளி குறித்தும் பல்வேறு சட்டங்களில் பெண்களின் உரிமைகள் குறித்தும் விழிப்புணர்வு பயிற்சி நடத்துதல் வேண்டும்.
- ஒவ்வொரு பிரச்சினைக்கும் பொறுப்பான அரசு துறை அல்லது நிறுவனம் எது என்பதைத் தீர்மானித்து, அந்தத் துறையுடன் அதிகாரப்பூர்வமாக கலந்துரையாடல், மனு, ஆலோசனைக் கூட்டம் அல்லது தொடர்ச்சியான பின்தொடர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- முந்தைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்து, தேவையான அடுத்தகட்ட செயல் திட்டத்தை உருவாக்க வேண்டும்.
- கூட்ட முடிவுகள் எழுத்துப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டு, அடுத்த கூட்டத்தில் அதன் செயல்பாட்டு நிலை மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

## குறிப்பு

## குறிப்பு



**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு**

M: +91 8660891451 | E: swan@hrf.net.in | W: hrf.net.in